[1987 ஏப்ரல் 23 [திரு. சு. முத்துசாமி]

இருக்கிறது. எந்த வசதியும் இல்லாமல் இன்னும் மோசமான இடங்கள் இருக்கும்போது அதையெல்லாம் எடுக்க வேண்டுமென்று இப்போது உத்தரவு போட்டு அந்தக் காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மொத்தமாக எங்கெங்கே பாலம் கட்ட வேண்டும், சாலைகள் அமைக்கப்பட வேண்டும் என்று திட்டம் தீட்டப்பட வேண்டுமென்று உத்தர விட்டு அது இப்போது தயார் செய்யப்பட்டிருக்கிறது. ஏறத் தாழ 300 கோடி ரூபாய்க்கு மேலே வருகிறது. இதையெல்லாம் 300 கோடி ரூபாயிலே ஒரே ஆண்டிலே செய்துவிட முடியுமா என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். எனவே படிப்படியாக அந்தப்பட்டியலிலே இருப்பதையெல்லாம் அரசாங்கம் செய்து கொண்டு இருக்கிறது.

(ஐ) மதுரை மாவட்ட சோதனைச் சாவடிப் பணியாளர்கள்.

திரு. ஆ. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டத்திலுள்ள சோதனைச் சாவடிகளில் தினக்கூலி அடிப்படையில் (என்.எம்.ஆர்.) அடிப்படை பணியாளர்களாக தொடர்ந்து ஐந்து வருடங்களாக பணியாற்றுகின்ற நபர்களை நிரந்தரமாக்குவது குறித்த" அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை.

மொத்தம் ஆறு தினக் கூலிப் பணியாளர்கள் மட்டும் மதுரை மாவட்டத்திலுள்ள வணிகவரி சோதனைச் சாவடிகளில் அலுவலக உதவியாளர் பணிகளை தினக்கூலி அடிப்படையில் செய்து வருகின்றனர். சட்டப்பேரவை உறுப்பினர் குறிப்பிட்டபடி இவர்களில் 5 ஆண்டுகள் பணி முடித்த தினக்கூலி பணியாளர்கள் யாரும் இல்லை. தற்போதுள்ள விதிமுறைகளின்படி சில்லறைச் செலவினப் பணியில் (Contingent Establishment) தொடர்ந்து 5 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் மட்டுமே முறையான பணியிடத்திற்கு (Regular Establishment) கொணரப்படுகின்றனர். தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்து வருபவர்களை முறையான பணியிடத்திற்கு கொணர விதிமுறைகளில் இடமில்லை.

[1987 ஏப்ரல் 23

திரு. ஆ. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 5 ஆண்டுகள் தினக் கூலி அடிப்படையில் சில்லறைச் செலவினப் பணியில் பணிபுரிபவர்கள் மட்டுமே பணியில் நிரந்தரமாக அமர்த்தப்படுவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே பணிபுரிபவர்கள் ஓவர் ஏஜாக இருக்கிறார்கள். 5 வருடங்களுக்கு அவர்கள் பணியாற்றிவிட்டால் அவர்களை நிரந்தரமாக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தினுடைய சோதனைச் சாவடிகளில் 6 தினக்கூலி பணியாளர்கள் அலுவலக உதவியாளர் பணியினைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் 5 ஆண்டுக்காலம் தொடர்ந்து பணியை முடிக்கவில்லை. குறைவாகத்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதனாலே அரசு விதி பிரகாரம் சில்லறைச் செலவினப் பணியில் தொடர்ந்து 5 ஆண்டுக்காலம் பணி முடித்தவர்களைத்தான் நிரந்தரம் செய்ய வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஆண்டுகள் தொடர்ந்து அவர்கள் பணியாற்றினால் அவர்களை நிரந்தரமாக்குவதற்கு அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில்லறைச் செலவினப் பணியில் பணி புரிந்தவர்களுக்கு மட்டும்தான் நிரந்தரமாக்குவதற்கு இடம்இருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

(ஓ) அனைத்து கூட்டுறவு பால்பண்ணைகளுக்கும் தாட்கோ மூலம் மானியம் வழங்குதல்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''காமராஜர் மாவட்டத்தில், அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவுப் பால் பண்ணைகளுக்கும், அரிசனக் கூட்டுறவுப் பால் பண்ணைகளுக்கும், 'தாட்கோ' மூலம் வழங்கப்படும் மானியம் எல்லா கூட்டுறவு பால் பண்ணைகளுக்கும் வழங்கப்படாததும் திருவில்லிப்புத்தூர் தொகுதியில் கூட்டுறவுப் பால் பண்ணைகளுக்கு மூன்றாண்டுகளாக மானியம் வழங்கப்படாதது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.